RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22250

OPEN ACCESS

# நா.முத்துக்குமார் படைப்புகளில் கையாண்ட முரண்களின் வகைகள்

செ.எஸ்தர் மேரி [அ, *], ப. தமிழரசி [அ]

[அ] தமிழ்த்துறை, கற்பகம் உயர்க்கல்விக் கழகம், கோவை-21, தமிழ்நாடு, இந்தியா

# Cultural Aspects of Karuvachi Kaaviyam Novel

S. Esther Mary [a, *], P. Thamilarasi [a]

[a] Department of Tamil, Karpagam Academy of Higher Education, Coimbatore-21, Tamil Nadu, India

* Corresponding Author: esthermanys@gmail.com

Received: 08-02-2022
Revised: 06-04-2022
Accepted: 11-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

The function of contradictions is essential in poetry. Techniques, classifications, contradictions, nature of words and presentation should be given in the right quantity and quality of research while writing and handling works through research. A writer should not only convey the essence but also the nuances and hints in his poems. Various techniques and contradictions have been explored here using the poems of N. Muthukumar.

**Keywords:** Muthukumar, Poetry, Writer, Techniques

## முன்னுரை

நம் முன்னோர்களின் அறிவுக் கருவூலங்களை நாம் கண்டுணர்வதற்கும், நம் வழித்தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் மொழி இன்றியமையாததாகின்றது. சொற்களின் குவியல் அல்ல மொழி. அது உணர்வுகளின் விருப்பங்களையும், எண்ணங்களையும், வரலாறுகளையும் கடத்தும் ஊடகமாக செயல்பட்டு வருகின்றது. எனவே காலத்திற்கும் அழியாத படைப்புகளை உருவாக்கும் போது நிச்சயம் மொழியில் கவனம் கொள்ள வேண்டும். இக்கவன மேலாண்மைதான் சொல்லத் துடிக்கும் எண்ணங்களுக்கு உயிர்க்கொடுக்கும் வார்த்தைகளை சரியான இடத்தில், சரியான நேரத்தில் கையாள வைத்து, மொழி ஆளுமையாக உருப்பெறுகிறது. ஆளுமை என்பது வண்ணம் போன்றது. ஒவ்வொரு பொருட்களுக்குள்ளும் வண்ணம் ஒளிந்திருப்பது போல, ஒவ்வொரு மனிதருக்குள்ளும் ஆளுமைப் பண்புகள் புதையுண்டிருக்கின்றன. அந்த வகையில் கவிஞரின் திறன்களின்பல்வேறு உத்திகளைப் பின்வருமாறு காணலாம்.

## உத்திகளின் வகைகள்

கலைஞர்கள் தம் எண்ணங்களைப் பிறருக்கு அழகுற உணர்த்தக் கலைகளைப் படைக்கின்றனர். அக்கலைகளுள் ஒன்றான கவிதையில் காலந்தோறும் பல்வேறு வகையான உத்திகளைக் கவிஞர்கள் கையாளுகின்றனர். புதுக்கவிதையில் இடம்பெறும் உத்திகளை 1. பருப்பொருள் வடிவ உத்திகள், 2.நுண்பொருள் வடிவ உத்திகள் என இரண்டு வகையாகப் பிரிப்பர். கவிதையைப் படைக்கும் போக்கிலேயே வெளிப்படையாகத் தோன்றி கவிதைப் பொருளைச்

சுலபமாக்கித் தருபவை பருப்பொருள் உத்திகள் ஆகும். கவிதைப் பொருளைக் கடினப்படுத்தி, சொற்களின் பின்னால் பொருளின் நிழலாய்த் தொடர்வது நுண்பொருள் வடிவ உத்திகளாகும்.

பருப்பொருள் வடிவ உத்திகள் பல எனினும் புதுக்கவிதையில் முதன்மை பெறும் உத்திகளாவன: 1.சித்திரமுறை, 2.முரண், 3.தலைப்பு, 4. சொல்லுடைப்பு, 5. சொல்லாடல், 6. அடுக்கு வருணணை, 7.அங்கதம் ஆகியன இடம்பெறுகிறது.

நுண்பொருள் வடிவ உத்திகளாவன 1. குறியீடு, 2. படிமம் ஆகும். ஹைக்கூ கவிதையில் குறியீடு, தொன்மம், முரண், அங்கதம், பழமொழி, விடுகதை, வினாவிடை, உவமை, உருவகம், தலைப்பிடல் போன்ற பல உத்திகள் பயன்படுத்தப்படுகின்றது.

கருத்துப்புலப்பாட்டிற்கு உத்திகள் பெரிதும் பயன்படுவதை,

"உள்ளத்தில் பொங்கிவழியும் அனுபவ நுகர்வை,

உணர்ந்த அளவில் நிறைந்த பொருளில் கவிஞன் வெளிப்படுத்தக்

கையாளும் இலாவகமே, பாவமே, உத்தியை உணர்த்தும் முறையாகும்"

என்று க.ப.அறவாணன் கூறியுள்ளார்.

புதுக்கவிதையில் அழகும் அர்த்தமும் வெளிப்பட புதுக்கவிஞர்கள்,

"உவமை, குறியீடு, தொன்மம், படிமம், அங்கதம், அறிவியல், இலக்கியம், நாட்டுப்புறவியல் தாக்கம், கதைப்போக்கு, காட்சிப்படுத்துதல் முதலிய கூறுகளைப் பயன்படுத்துகின்றனர்" என்று முனைவர் பெ.சுபாசு சந்திரபோசு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அறிஞர்கள் குறிப்பிட் உத்திகளுள் சிலவற்றை நா.முத்துக்குமார் தன் கவிதைகளில் எங்ஙனம் கையாண்டுள்ளார் என்பதை பின்வருமாறு காணலாம்.

## அறிவுப்பூர்மான முரண்

புதுக்கவிதைகளில் கவிதை வெளிப்பாட்டிற்கு ஒரு சிறந்த உத்தியாக முரண் உத்திமுறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முரண் தொடைகளைக் கொண்டு தமிழ் புதுக்கவிதை மிளிர்ந்ததுண்டு. கவிதைக்கு ஒரு கட்டுக்கோப்பைக் கொடுப்பது முரண். ஒன்றுக்கொன்று முரணான இரண்டால் கவிதை மனதிற்கு விடுதலையுணர்வைத் தருகின்றது.

"ஹைக்கூக்களின் உயிர்நிலை முரண்கள்தாம். ஒவ்வொரு ஹைக்கூவிலும் குறிப்பிட்ட பொருளைக் காணலாம். அதேசமயம் அதன் தனித்தன்மையும், பிரிந்து நிற்கும் போக்கும் சிதையாமல், மற்ற பொருள்களிலிருந்து அதனை வெளிப்படுத்தும் தன்மையும் பளிச்செனப் புலப்படும்" என்று லீலாவதியும், "உண்மையில் இன்மையும், இன்மையில் முழுமையுமே (Nothing of everything and everything is nothing) ஹைக்கூவின் முரண் - தத்துவார்த்த அறிவியலும் இதுவே" "ஸென் தத்துவங்கள், அறிவுப்பூர்வமான முரண்கள் வழியே ஹைக்கூவில் வெளிப்படுத்தப்பட்டன. இவை வெளிப்படையாக அல்லது குறிப்பாகச் சொல்லப்பட்டன. பிளித் இதனை (Contradiction) என்னும் ஆங்கிலச் சொல்லால் அழைத்தார். இலக்கியத்தில் ஒரு உத்தியாகக் கருதப்படும் விபரீத முரண்அணி (Irony) ஹைக்கூவின் 'முரண்' பண்பினின்றும் வேறுபட்டதல்ல" என நிர்மலா சுரேஷீம் தரும் விளக்கங்கள் முரண்கள்தான் ஹைக்கூவின் உயிர்நிலை என்பதை உணர்த்துகின்றன. இப்படியாகப் பலரும் விளக்கம் தரும் முரண் உத்தியில் அமைந்த கவிதைகள் காட்சி முரண், இயற்கைக் காட்சி முரண், செயல் முரண், இயல்புக் கற்பனை முரண், வரலாற்று முரண், படிம முரண், கருத்து முரண், அங்கத முரண், நிகழ்வு முரண், நுண்பொருள் முரண் என்பதாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் நா.முத்துக்குமார் தன் கவிதைகளில் பயன்படுத்தியுள்ள உத்தி முரண்கள் பற்றி அறியலாம் (Muthukumar, 2020a & Muthukumar, 2020b).

## செயல் முரண்

சொல்வது ஒன்றாகவும், செய்வது அதற்கு எதிராகவும் அமைவது செயல்முரண் ஆகும். ஆட்சியாளர்களும் மக்களும் எல்லாம் தமிழ் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று கூறிக் கொண்டு மட்டும்தான் இருக்கின்றார்கள். இது தமிழ்நாடு என்ற பெயரளவிலேயே நின்று விட்டது. செயலில் பலர் ஈடுபடவில்லை என்பதை,

"தமிழைத் தவிர

மற்ற எல்லாமே

வாழ்ந்து கொண்டிருக்கும்

தமிழ்நாடு"

என்ற கவிதையில் பதிவு செய்துள்ளது செயல்முரண் உத்தியாக அமைகின்றது.

"வேலு ஜீவல்லர்ஸ்

அதிபர் கைது

நம்பிக்கை

நாணயம் நேர்மை

புன்னகை அதிபரின்

பொன்நகை கரங்களில்

இரும்பில் விலங்கு"

என்னும் இக்கவிதையில் நம்பிக்கை, நாணயம், நேர்மை என்று கூறிவிட்டு, ஏமாற்றுக் காரியங்களில் ஈடுபட்டு கைதானதால் செயல் முரண் அமைந்துள்ளது.

"இங்கே

உறையே கத்தியைத் தின்கிறது!

கிணறே தண்ணீரைக் குடிக்கிறது!

வழித்துணைக்கென்று

நாம்

அழைத்து வந்த மின்மினிகள்

இருளுடன் கூட்டு சேர்நது;

நம் பாதையில்

பள்ளம் பறிக்கின்றன

ஆகையால் மக்களே

அணுகுங்கள் கற்பழிப்புக்கு

அவசரப் போலீஸ்"

என்ற இக்கவிதையில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய காவலர்கள், கண்டிப்பிற்கும் தண்டிப்பிற்கும் உள்ளாகும் செயல்களில் ஈடுபடுவதைச் சுட்டிக்காட்டி யுள்ளமையால் இது செயல் முரணாக அமைந்துள்ளது.

## நிகழ்வு முரண்

ஒரே செயல் ஒருவருக்கு மகிழ்வையும், மற்றவருக்கு வருத்தத்தையும் தரும். இப்படிப்பட்ட நிகழ்வுகளின் முரண்பட்ட காட்சிகளைக் கருத்தில் கொண்டு, கவிஞன் தன் கருத்தை இணைத்துக் கூறுவது நிகழ்வு முரண்.

"அருகில் தொங்கிய

இன்னொரு தீவிலும்

அதே மொழி பேசிய

மக்களின் பிணங்கள்"

என்னும் இக்கவிதையில் இலங்கை தீவிலும் தமிழ்ப்பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ்நாட்டில் தமிழ் பேசி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இலங்கையில் மடிந்து ஒழிகின்றனர் என்ற சமகால நிகழ்ச்சியைக் கூறுவதால் நிகழ்வு முரண் ஆயிற்று.

## இயல்புக் கற்பனை முரண்

கவிஞர் இயல்பாகக் கண்ட காட்சியின் மீது தன் மனதில் எழும் கற்பனையைப் புகுத்திக் கூறுவது இயல்புக் கற்பனை முரண் ஆகும்.

"நிலவை சாட்சி வைத்து

தெருவிளக்குடன் நடனமாடுகிறான்

யாரோ ஒரு குடிகாரன்"

என்னும் இக்கவிதையில் நிலவுத் தோன்றுதல் என்பது நாள்தோறும் நிகழக்கூடிய ஒரு செயல். ஆனால் அந்த நிலவினைச் சாட்சியாக வைத்துதான் மதுப்பிரியர் ஒருவர் நடனமாடுகிறான் என்றுக் கூறியுள்ளதால் இது இயல்புக் கற்பனை முரண் ஆகும்.

## யதார்த்த முரண்

திட்டமிட்டு இயங்க வேண்டும் என்று வழிவகுக்கும் கருத்தாளர்கள் சில யதார்த்த செயல்களையும் ஏற்றிக் கூறுவது யதார்த்த முரண் ஆகும்.

"உன் பாஞ்சாலி

சபதம் முடிந்தும்

கூந்தல் முடியவில்லை

ஹேர் ஆயில் விளம்பரத்தில்

நல்ல வருமானம்"

என்னும் இக்கவிதையில் தற்காலத்தில் சபதம் முக்கியமன்று. வருமானம்தான் முக்கியம் என்ற யதார்த்தத்தைப் பதிவு செய்துள்ளமையால் இது யதார்த்த முரணாக அமைகின்றது.

## காட்சி முரண்

ஒரு முரண்பட்ட காட்சியைக் காட்டி அதன்வழி கவிஞர்தான் உணர்த்த விரும்பிய கருத்தை உணர்த்துவது காட்சி முரணாகும்.

"அண்ணா சாலையில் இரவு நேரம்

நியான் விளக்குகளை ரசிக்க முடியவில்லை

பஞ்சரான வண்டியுடன் நான்"

என்னும் இக்கவிதையில் இரவின் அழகை ரசிக்க முடியவில்லை. பஞ்சரான வண்டியுடன் என காட்சியை முதன்மைப்படுத்தியுள்ளதால் காட்சி முரணாகிறது.

## இயற்கைக் காட்சி முரண்

இயற்கையில் நிகழும் முரண்பட்ட காட்சிகளை ஒரு கவிஞன் மாற்றியுரைப்பது இயற்கைக் காட்சி முரண்.

"அப்பாடா

ஒருவழியாய்

வடக்கும் தெற்கும்

இணைந்து விட்டன!"

என்னும் இக்கவிதையில் இயற்கைக்காட்சி முரண் விளங்குகிறது.

## பொருள் முரண்

சில சொற்களைத் தவறான பொருளில் தொடர்ந்து கையாள்வது பொருள் முரண்.

"ஜோதிடக் குறிப்புகளில்

தண்ணீரில் கண்டம்

என்பது

தண்ணீர் லாரியில் கண்டம்

என்றிருக்க வேண்டும்"

என்னும் இக்கவிதையில் தண்ணீரில் கண்டம் இல்லை. தண்ணீர் லாரியில் கண்டம் என்று திருத்தம் செய்ய வேண்டும் என்றும்,

"டைகர் இங்கே வா

என்றதும்

வீட்டிலிருந்து

வெளியே வருகிறது

நாய்க்குட்டி"

என்ற இக்கவிதையில் ஆங்கிலத்தில் டைகர் என்பது தமிழில் புலியைக் குறிக்கும். ஆனால் இங்கு டைகர் என்று அழைத்தவுடன் நாய்க்குட்டி வெளிவருகிறது என்று பொருள் முரணைத் தன் கவிதைகளில் கையாண்டுள்ளார்.இவர் பல இடங்களில் முரண்பட்டிருக்கும் முகமூடி மனிதர்களை முரண்களுக்கு மெருகேற்றி தன் கவிதையின் வழி ஒன்றிணைக்க முயன்றுள்ளதை இதன் வாயிலாக அறியமுடிகின்றது.

## முடிவுரை

கவிதையை திறம்பட எழுதுவதும் அதனை கையாள்வதும் இன்றியமையாதது. அதனில் கவிதைகளில் முரண்களை முறைப்படுத்துவதும் வகைப்படுத்துவதும் நயம்பட வழங்குவதும் அவசியமாகும். உத்திகளைக் கையாளும் போது கவிதைகளும் படைப்புகளும் மேலும் அழகாகிறது. என்பது இதன் மூலம் அறிய முடிகிறது. கவிதையை எழுதுவதற்கு கற்பனைத்திறனும் காட்சித்திறனும் அவசியம். அதுபோல கவிதைகள் நிறைவுறும் போது அதனை படிப்பவர்களுக்கும், உணர்வதற்கும் உத்திகளும் முரண்களும் அவசியமாகிறது. முரண்களைக் கையாள்வது கவிஞர்களின் தனித்திறனை எடுத்தியம்புகிறது. கவிதையின் நடை நன்கறியப்பட்டு, பொதுவான காட்சித்திறனுக்கும், கவிதை வளத்திற்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. கவிதைகளில் உத்திகள் கையாளும் விதம் அறியப்படுகிரது. படைப்புகளை மேலும் தெளிவுப்படுத்த உதவுகிறது. படைப்புகளை வாசிக்கும் போது முரண்களின் தனித்தன்மையை மற்றொரு கவிஞனால் உணரமுடிகிறது. கவிதை வளத்தை அடுத்த பாதைக்கு எடுத்துச் செல்ல முடிகிறது.

## References


Muthukumar, N. (2020a) Patchaiyapanilirunthu Oru Thamizh Vanakkam, Discovery Book Palace, Chennai, India

Muthukumar, N. (2020b) Kuzhanthaigal Niraintha Veedu, Discovery Book Palace, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License